நகராட்சி அலுவலகம்,
விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.
நாள் 21/11/2025

**சாதரணக் கூட்டம்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் எதிர்வரும் **2025**ம் வருடம் **நவம்பர்** மாதம் **26** ம் தேதி **புதன் கிழமை காலை** 10.30 மணியளவில் **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற சாதரணக் கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

**பொருள் எண். 1**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் படி மாலைமுரசு நாளிதழில் 2025 ம் ஆண்டு சிறப்பு தொழில் மலர் வெளியிடவுள்ளதாகவும்,அதில் அரசு சார்பில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் சாதனைகள் அடங்கிய விளம்பரத்தினை, நிதி நிலைக்கேற்ப வழங்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் படி இந்நகராட்சி நடைபெற்ற திட்டப்பணிகள் குறித்த விளம்பரத்தினை வழங்கியதற்கும், அதற்கான செலவினத் தொகை ரூ.16500/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் நடைபெற்ற திட்டப்பணிகள் குறித்த விளம்பரத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதப்படி, மாலைமுரசு நாளிதழ் சிறப்பு தொழில் மலரில் வெளியிட்ட வகைக்கு, பட்டியல் தொகை ரூ. 16500/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 720 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 2**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் காலை உணவு திட்டத்தின் கீழ் , நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு 1 முதல் 5 ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது மேற்கண்ட திட்டத்தின் கீழ் உணவு வழங்கும் நிறுவனத்தை தேர்ந்தேடுக்கும் பொருட்டு, ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை காலை உணவு வழங்கும் பணிமேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின் படி மாவட்ட அளவிலான தினகரன் நாளிதழில் வெளியிட்ட வகைக்கு, தினகரன் நாளிதழ் மூலம் வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ 14742/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு (ந.க.எண் 1509/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு**

ஒப்பந்தப்பள்ளி விதிமுறைகளின் படி விளம்பரம் செய்யப்பட்டுள்ளதையும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 721 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 3**

திருநெல்வேலி மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ள விக்கிரமசிங்கபுரம் நகராட்சியானது, இராண்டாம் நிலை நகராட்சியாகும், இந்நகராட்சி 21 வார்டுகள் கொண்டு, சுமார் 38.57சதுர கி,மீ பரப்பளவில், சுமார் 52355 மக்கள் தொகை கொண்ட நகராட்சியாகும். விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியானது, இரண்டு வருவாய் கிராமங்களாக பிரிக்கப்பட்டு, கோட்டைவிளைப்பட்டி, முதலியார்பட்டி, அய்யனார்குளம், அகஸ்தியர்புரம் , அனவன்குடியிருப்பு மற்றும் அடர்ந்த வனப்பகுதிகளான காரையார்,

சேர்வலார் ஆகிய பகுதிகளை உள்ளடைக்கிய நகரமாக உள்ளது. மேற்கண்ட அனைத்து பகுதிகளுக்கும் அவ்வப்போது குடிநீர் ஆதாரம் மற்றும் விநியோகம் பற்றி கள ஆய்வு மேற்கொள்ளவும், திடக்கழிவு மேலாண்மை, பொது சுகாதாரம், தெருவிளக்கு, திட்டப்பணிகள் மற்றும் இதர அத்தியாவசிய பணிகளை பார்வையிடுவதற்கும் செல்ல வேண்டியுள்ளது, . மேலும் விக்கிரமசிங்கபுரம் நகராட்சியின் தலைமை அலுவலகமான மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இந்நகராட்சியில் இருந்து சுமார் 55 கி.மீ தூரத்தில் உள்ள திருநெல்வேலியில் அமையப்பெற்றுள்ளது. இதனால், மாவட்ட ஆட்சியர் அவர்களையும், மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களையும் மற்றும் பிற மாவட்ட உயர் அதிகாரிகளையும், விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக பணி நிமித்தமாக சென்று பார்த்து வருவதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் மகேந்திரா பொலிரோ ஈப்பு வாகனம் எண் TN 76 T 9612 வாங்கப்பட்டு 14 வருடங்கள் முடிந்து விட்ட நிலையிலும், வாகனத்தின் அதிகப்பட்ச கிலோமீட்டரான 2,50,000 கி.மீ தாண்டி பயன்படுத்தப்பட்டு வருவதாலும், இவ்வாகனம் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதுடன், பயனத்தின் போது அசாதாரண சூழ்நிலை ஏற்படுகிறது. இந்நகராட்சி பொதியடி மழை அடிவாரத்தில் அமையப்பெற்றுள்ளதால், பருவ மழை காலங்களில் ஏற்படும் வெள்ள சேதங்களை பார்வையிடும் பொருட்டும் எந்த நேரத்திலும் செல்ல வேண்டிய சூழ்நிலையில், இவ்வாகனத்தின் மூலம் பயனம் மேற்கொள்ள இயலாத நிலையும் ஏற்பட்டுள்ளது. மேலும் இந்த வாகனத்திற்கு பராமரிப்பு செலவினங்கள் அதிகமாகிறது. இவ்வாறான சூழ்நிலையை தவிர்க்கும் பொருட்டு முதிர்ந்த (Finess Expired) நிலையில் உள்ள இந்த வாகனத்தினை கழிவு செய்து, நகராட்சி ஆணையாளர் பயன்பாட்டின் அவசியத்தை கருதிற் கொண்டு புதியதாக ஈப்பு வாகனம் ஒன்று கொள்முதல் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது . அதன் பொருட்டு விக்கிரமசிங்கபுரம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக மகேந்திரா பொலிரோ ஈப்பு வாகனம் ஒன்று அரசின் அங்கீகரிக்கப்பட்ட GEM Govt.. e Market prize விலைவிகிதத்தில் கொள்முதல் செய்வதற்கும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும், மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

1. முதிர்ந்த நிலையில் உள்ள வாகன எண் TN 76 T 9612 வாகனத்தை கழிவு செய்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக மகேந்திரா பொலிரோ ஈப்பு வாகனம் ஒன்று GEM Govt.. e Market prize விலைவிகிதத்தில் கொள்முதல் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்
3. இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெறுவதற்கு வழிமுறையாக கருத்துரு அனுப்பி வைப்பதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 722 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 4**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுநிதியின் கீழ் சேரவலார் நகராட்சி பள்ளியில் சாய்வு தளம் மற்றும் மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ள ரூ.3.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 683 நாள் 26.09.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 21.11.2025 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி சேர்வலார் நகராட்சி பள்ளியில், சாய்வு தளம் அமைத்தல் மற்றும் மேம்பாடு பணி செய்தல் (மதிப்பீடு ரூ.3.60 இலட்சம்) ந.க.எண் 1429/ 2025 /இ 1 | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.13% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 1.03% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.13% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 723 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 5</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுநிதியின் கீழ் வார்டு எண் 4, 6. 7. 19. 21. 18. 12 ஆகிய பகுதியில் சிதிலமடைந்த மழைநீர் வடிகாலினை சரி செய்யவும், புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளவும் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 687 நாள் 26.09.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 21.11.2025 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 4,6,7,19,21,18,12 ஆகிய பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் சீரமைத்தல் மற்றும் புதியதாக கட்டுதல் ந.க.எண் 1428/ 2025 /இ 1 | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.02% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.18% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.02% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 724 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 6</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுநிதியின் கீழ் வார்டு எண் 1, சமுதாய நலக்கூடத்தில் அடிப்படை வசதிகளான புதிய கழிப்பிடம் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 688 நாள் 26.09.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில்

ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 21.11.2025 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 1 முதலியார்பட்டி பகுதி சமுதாய நலக்கூடத்தில் கழிப்பறை அமைத்தல்<br>ந.க.எண் 1428/ 2025 /இ 1 | திரு. கே.ராஜா<br>ஒப்பந்தக்காரர்<br>விக்கிரமசிங்கபுரம் | 0.09%<br>மதிப்பீட்டைவிட<br>குறைவு |
| | | திருமதி. சுப்புலெட்சுமி<br>ஒப்பந்தக்காரர்<br>திருநெல்வேலி | 0.89%<br>மதிப்பீட்டைவிட<br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.09% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 725 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 7</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுநிதியின் கீழ் வார்டு எண் 1 முதல் 11 வரை உள்ள பகுதியில் உள்ள பகுதிகளில் சீரமைக்கப்பட்ட சாலைகளின் பக்கவாட்டு வடிகாலினை சீரமைத்தல் மற்றும் உயர்த்தி அமைத்தல் பணி மேற்கொள்ள ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 685 நாள் 26.09.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 21.11.2025 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 1 முதல் 11 வரை உள்ள பகுதிகளில் சீரமைக்கப்பட்ட சாலைகளின் பக்கவாட்டு வடிகாலினை சீரமைத்தல் மற்றும் உயர்த்தி அமைத்தல்<br>ந.க.எண் 1428/ 2025 /இ 1 | திரு. கே.ராஜா<br>ஒப்பந்தக்காரர்<br>விக்கிரமசிங்கபுரம் | 0.21%<br>மதிப்பீட்டைவிட<br>குறைவு |
| | | திருமதி. சுப்புலெட்சுமி<br>ஒப்பந்தக்காரர்<br>திருநெல்வேலி | 0.39%<br>மதிப்பீட்டைவிட<br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.21% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 726 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 8</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுநிதியின் கீழ் வார்டு எண் 12 முதல் 21 வரை உள்ள பகுதியில் உள்ள பகுதிகளில் சீரமைக்கப்பட்ட சாலைகளின் பக்கவாட்டு வடிகாலினை சீரமைத்தல் மற்றும் உயர்த்தி அமைத்தல் பணி மேற்கொள்ள ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 686 நாள் 26.09.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில்,

21.11.2025 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 12 முதல் 21 வரை உள்ள பகுதிகளில் சீரமைக்கப்பட்ட சாலைகளின் பக்கவாட்டு வடிகாலினை சீரமைத்தல் மற்றும் உயர்த்தி அமைத்தல்<br>ந.க.எண் 1428/ 2025 /இ 1 | திரு. கே.ராஜா<br>ஒப்பந்தக்காரர்<br>விக்கிரமசிங்கபுரம் | 0.21%<br>மதிப்பீட்டைவிட<br>குறைவு |
| | | திருமதி. சுப்புலெட்சுமி<br>ஒப்பந்தக்காரர்<br>திருநெல்வேலி | 0.26%<br>மதிப்பீட்டைவிட<br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.21% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 727 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 9</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுநிதியின் கீழ் சேர்வலார், தருவட்டான்பாறை, சின்னமயிலார் மற்றும் அகஸ்தியர்நகர் காணிகுடியிருப்பு பகுதியில் புதிய தெருவிளக்கு அமைத்தல் பணி மேற்கொள்ள ரூ.2.30 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 684 நாள் 26.09.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 21.11.2025 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி சேர்வலார், தருவட்டான்பாறை, சின்னமயிலார் மற்றும் அகஸ்தியர்நகர் காணிகுடியிருப்பு பகுதியில் புதிய தெருவிளக்கு அமைத்தல்<br>ந.க.எண் 1428/ 2025 /இ 1 | சூப்பர் எலக்ட்ரிக்கல்ஸ்<br>ஒப்பந்தக்காரர் | 0.09%<br>மதிப்பீட்டைவிட<br>குறைவு |
| | | முருகன் டிரேடர்ஸ்<br>ஒப்பந்தக்காரர் | 6.45%<br>மதிப்பீட்டைவிட<br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.09% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் சூப்பர் எலக்ட்ரிக்கல்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 728 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 10</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுநிதியின் கீழ் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக தரை தளம் கட்டிடம் மற்றும் அம்மா உணவகம் கட்டிடங்கள் பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 713 நாள் 17.10.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 21.11.2025 அன்று இணையதளம் வழியாக இரண்டு

ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக தரை தளம் கட்டிடம் மற்றும் அம்மா உணவகம் கட்டிடங்கள் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் ந.க.எண் 1428/ 2025 /இ 1 | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.03% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.86% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.21% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 729 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 11**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுநிதியின் கீழ் பொதிகையடி தூய நீரேற்று நிலையத்தில் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வரும் புதிய கட்டிடங்களின் மேல் தளத்தில் weathering course, தளகற்கள் பதித்தல், வர்ணம் பூசுதல் மற்றும் இதர பணி மேற்கொள்ள ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 715 நாள் 17.10.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 21.11.2025 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதிகையடி தூய நீரேற்று நிலையத்தில் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வரும் புதிய கட்டிடங்களின் மேல் தளத்தில் weathering course, தளகற்கள் பதித்தல், வர்ணம் பூசுதல் மற்றும் இதர பணி கள் மேற்கொள்ளுதல் ந.க.எண் 1428/ 2025 /இ 1 | சரவணா இன்ஜினியரிங் ஒப்பந்தக்காரர் திண்டுக்கல் | 0.1% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | இ.சி.டி. இன்ஃபரா ஸ்டரக்ச்சர் சென்னை | 3.00% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.1% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் சரவணா இன்ஜினியரிங் ஒப்பந்தக்காரர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 730 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 12**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 18462/2023/D01 நாள் 07.10.2025 ல் நகர் பகுதியில் சாலைகளில் உள்ள திட்டுகள் மற்றும் பள்ளங்களை (Pot holes) உடனுக்குடன் சீரமைக்கும் பணி மேற்கொள்வதற்கு செயல்முறை நடவடிக்கைகள் ( Standard operating Procedure) வரையறுக்கப்பட்டு , அதன் படி பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்

அடிப்படையில் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி தார் சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகளில் ஏற்படும் பள்ளங்கள் , திட்டுகளை (pot holes & Patches) சரி செய்து, ஒட்டுபணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் வரையறுக்கப்பட்டுள்ள செயல்முறை நடவடிக்கைளின் ( Standard operating Procedure) படி, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 731 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 13**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி குடிநீர் விநியோக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகளில் இருந்து நாள் தோறும் குடிநீர் விநியோகம் செய்திட போதிய குடிநீர் விநியோக பணியாளர்கள் மற்றும் வால்ல தொட்டி திறப்பாளர்கள் இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்படாத நிலையில், குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு வழங்கக்கூடிய குடிநீர் விநியோகம் பாதிப்படையாமல் இருக்க வேண்டி கீழ்க்கண்ட விவரப்படி ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு பணியமர்த்திட வேண்டி, தயார் செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட விவராடியான மதிப்பீட்டுத் தொகைக்கு மன்ற அனுமதி வேண்டியும் , பணி மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திட வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

1. குடிநீர் விநியோகம் பணிக்கு 6 நபர்கள் (6 மாத காலத்திற்கு) ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் பணியமர்த்திட – ரூ. 9.00 இலட்சம்
2. குடிநீர் விநியோகம் பணிக்கு 6 நபர்கள் (6 மாத காலத்திற்கு) ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் பணியமர்த்திட – ரூ. 9.00 இலட்சம்

**அலுவலகக்குறிப்பு**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொறியியற் பிரிவில் போதிய திறனற்ற பணியாளர்கள் பணிக்கு அமர்த்தப்படாத நிலையில் குடிநீர் விநியோக அவசியம் மற்றும் அவசரம் கருதி இப்பணியாளர்களை ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு பணியமர்த்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 18,00/- இலட்சத்திற்கும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 732 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 14**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட பொதிகையடி தூய நீரேற்று நிலையத்தில் இருந்து இந்நகராட்சி மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது மக்கள் நலன் கருதி , தொற்று நோய் பரவாமல் தடுக்க வேண்டி, விநியோகம் செய்யப்படும் குடிநீரில் Liquid Chlorination Plant மூலம் கோளரின் கலக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட Liquid Chlorination Plant க்கு தேவையான Liquid Chlorine கொள்முதல் செய்ய இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 10.00/- இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம் மேலும் பணிகள்

மேற்கொள்ளவும், , செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**அலுவலகக்குறிப்பு**

பொது மக்கள் நலன் கருதி , தொற்று நோய் பரவாமல் தடுக்க வேண்டி, விநியோகம் செய்யப்படும் குடிநீரில் Liquid Chlorination Plant மூலம் கோளரின் கலந்து குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 10.00/- இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம் மேலும் பணிகள் மேற்கொள்ளவும், , செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 733 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 15**

அரசாணை (நி) எண் 324 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 17.10.2025 நகராட்சி பகுதிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் அடிப்படை சேவைகளை மேம்படுத்திட அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் தலைமையில் , நகராட்சி அலுவலர் ஒருவரை கூட்டுநராக கொண்டு அவ்வார்டு பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்கும் வகையில் , வார்டு அளவிலான சிறப்புக் கூட்டங்களை 27.10.2025. 28.10.2025 மற்றும் 29.10.2025 ஆகிய தினங்களில் ஏதேனும் ஒரு நாளில் நடத்தி, பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை விவரங்கள் குறித்து விவாதித்து, முன்னுரிமை அடிப்படையில் ஏதேனும் மூன்று (3) கோரிக்கைகள் மட்டும் செயல்படுத்தும் விதமாக கோரிக்கைகளை பெற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் படி , இந்நகராட்சி பகுதியில் நடைபெற்ற வார்டு அளவிலான சிறப்பு கூட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் மூன்று (3) கோரிக்கைகள் பெறப்பட்டது.. மேற்கண்ட பணிகளுக்கு மதிப்பீடு தயாரித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் திருநெல்வேலி மண்டல நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில், இந்நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட விவரப்படியான மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டியும் , பணி மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திட வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 1,2,3,5,6,8,11 மற்றும் 16 பகுதிகளில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் 8 வது வார்டு பகுதியில் பேவர் பிளாக் சாலை பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | ரூ. 15.00 |
| 2 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 2,7 பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் வார்டு 20 பகுதியில் சிறுமின் விசை மோட்டார் அறை அமைத்தல் | ரூ. 5.00 |
| 3 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 9 , 13 மற்றும் 17 பகுதியில் மழைநீர் வடிகால் , சிறு பாலம் மற்றும் வார்டு 10, 14 பகுதியில் பேவர்பிளாக் சாலை மற்றும் பரரமரிப்பு பணி | ரூ. 15.00 |
| 4 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 20 அருந்ததியர் தெருவில் கழிப்பிடம் அமைத்தல் | ரூ. 5.70 |

**அலுவலகக்குறிப்பு**

சிறப்பு வார்டு குழுக் கூட்டத்தில் பெறப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில், மேற்கண்ட பணிகளை உடன் செய்து முடிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் திருநெல்வேலி அவர்களால் தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருவதால், பணியின் அவசரம் கருதி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம் மேலும் பணிகள் மேற்கொள்ளவும், , செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 734 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 16**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 13 குறிஞ்சி மலர் தெருவில் பொது மக்கள் பயன்பாட்டில் உள்ள அடிபம்பு உள்ளது. அதனை அப்பகுதி பொது மக்களின் தேவையினை கருத்திற்கொண்டு, அப்பகுதியில் அமையப்பெற்றுள்ள அடிபம்பினை அகற்றி விட்டு, சிறுமின்விசை மின் மோட்டார் பொருத்தி தர வேண்டி, 13 வது நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் கோரிக்கை மனு பெறப்பட்டுள்ளது, அதன் படி அப்பகுதியின் பொது மக்கள் நலன் கருதி அடிப்பம்பினை அகற்றி புதிய சின்டெக்ஸ் தொட்டி அமைத்து சிறுமின் விசை பம்ப் ரூம் அமைக்க வேண்டி நகராட்சி பொறியாளர் அவர்களால் மிதிப்பீடு தயார் செய்யவும், பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

வார்டு எண் 13 நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் படியும், அப்பகுதி பொது மக்களின் நலன் கருதியும் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் : 735 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 17**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 20 காமராஜ் நகர் பகுதியில் மழை காலங்களில், வடிகாலின் வழியே வெள்ள நீர் அதிகப்படியாக செல்வதால், அதனை தடுக்கும் பொருட்டு அப்பகுதி வாறுகாலின் முகப்பில் உள்ள கல்வெட்டினை உயர்த்தி அமைக்க வேண்டியது அவசியமாகிறது. மேற்கண்ட பகுதி பொது மக்களின் நலன் கருதியும், குடியிருப்பு பகுதிக்குள் வெள்ள நீர் செல்வதை தடுக்கும் பொருட்டும் பணி மேற்கொள்ள நகராட்சி பொறியாளர் அவர்களால் மிதிப்பீடு தயார் செய்யவும், பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

அப்பகுதி பொது மக்களின் நலன் கருதியும், நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் படியும், மதிப்பீடு தயார் செய்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் : 736 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 18**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 14 கொட்டாரம் சுவிசேசபுரம் பகுதியில், மழைநீர் வடிகால் ஏதுமில்லை என்பதாலும், மேற்கண்ட பகுதி மிகவும் தாழ்வான பகுதியாக உள்ளதாலும் மழைகாலங்களில் இப்பகுதியில் மழைநீர் தேங்குவதுடன், அருகில் உள்ள குடியிருப்பு பகுதிக்குள் செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதனை தவிர்க்கும் பொருட்டு மேற்கண்ட பகுதியில் பொது மக்களின் நலன் கருதி புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்து தர வார்டு எண் 14 நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அதன் படி நகராட்சி பொறியாளர் அவர்களால் மதிப்பீடு

தயார்செய்து பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

அப்பகுதி பொது மக்களின் நலன் கருதியும், நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் படியும், மதிப்பீடு தயார் செய்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் : 737 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**ஓம்/- S.P.M.செல்வசுரேஷ் பெருமாள்**

**நகர்மன்றத் தலைவர்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி